வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

---

**வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் வைத்திருப்போருக்கான கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்**

2017இன் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2)ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் சட்டத்தின் 6ஆம் மற்றும் 7ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணுகின்ற இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கு பின்வருவனவற்றிற்குட்பட்டு தமது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கடன் வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

2. வழமையான வங்கித்தொழில் நடவடிக்கைகளில் தமது வர்த்தகத் தீர்மானங்களின் பகுதியொன்றாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தீர்மானிக்கக்கூடியவாறு இலங்கையில் ஏதேனும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதற்கு கடன்களை வழங்கலாம்.

3. இவ்வனுமதியின் கீழான கடன்கள், உரிய காலத்தில் கடனை முழுமையாகத் தீர்ப்பதற்கு ஏற்ற விதத்தில் அதன் சாதாரண வியாபார நடவடிக்கைகளின் போது அவர்கள் வெளிநாட்டு நாணயத்தில் கிரமமான காசுப்பாய்ச்சலினை பெறுகின்றனர் என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் திருப்தியடைகின்ற விதத்தில் வெளிநாட்டு நாணயத்தினை உழைப்பவர்களுக்கு மாத்திரம் வழங்குதல் வேண்டும்.

4. தம்வசமுள்ள அல்லது எதிர்பார்க்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயக் காசுப்பாய்ச்சல்களிலிருந்து கடனைத் தீர்ப்பனவு செய்வதற்கான வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்போரின் இயலுமையினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் நுண்மதியுடன் மதிப்பீடு செய்தல் வேண்டுமென்பதுடன் அவர்களது மதிப்பீட்டிற்கு வலுவளிப்பதற்கான ஆவணங்களையும் பேணுதல் வேண்டும்.

5. கடன் முழுமையாக பெறுமதி இழந்துள்ளது என அதன் நிதியியல் கூற்றுகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இனங்காணுகின்ற திகதியிலிருந்து 90 நாட்களை விஞ்சாத கால கட்டமொன்றில் மாத்திரம் கடன் அறவீடுகள் இலங்கை ரூபாவில் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய திகதிக்கு முன்னர் இலங்கை ரூபாவில் கடன்களை மீட்பதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன் அனுமதியினைக் கோருதல் வேண்டும்.

6. இப்பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் பற்றிய மாதாந்த கூற்றுக்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பு I இற்கமைய வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு dfem@cbsl.lk என்ற மின்னஞ்சல் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

7. நீக்கப்பட்ட 1953இன் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போருக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களின் நியதிகளும் நிபந்தனைகளும் அத்துடன் கடன்களின் அறவீடும் இப்பணிப்புரையின் நிபந்தனைகளுக்கமைவாக செயற்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

பணிப்பாளர் - வெளிநாட்டு நாணயச் செலாவணித் திணைக்களம்

2017 நவெம்பர் 20

## வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் வைத்திருப்போருக்கான கடன்கள் தொடர்பான மாதாந்தக் கூற்று

வங்கியின் பெயர்: ........................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ................................

| கடன்பாட்டாளரின் பெயர் | கடன் வழங்குகின்ற திகதி | நாணயத்தின் வகை | கடன் ஒப்பந்தக் காலம் | வழங்கிய தொகை | கடன் நோக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்ததெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்கூறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ......................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ..........................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................